## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் - 06 | வரலாறு | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ......................

### பகுதி I

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை தேடி அறிந்து விளக்குவது.
    1) புவியியல் 2) குடியியல் 3) வரலாறு 4) விஞ்ஞானம்

02. புரதான அரச சிம்மாசனம் காணப்படும் அருங்காட்சியகம் எங்கு உள்ளது
    1) யாழ்ப்பாணம் 2) கொழும்பு 3) காலி 4) அம்பாந்தோட்டை

03. வரலாறு பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவது
    1) நாணயங்கள் 2) தொல்பொருட்கள் 3) கல்வெட்டுக்கள் 4) மூலாதாரங்கள்

04. தொல்பொருள் மூலாதாரம் எனக் குறிப்பிடப்படுவது இவற்றுள்
    1) நூல்கள் 2) கதைகள் 3) மனித எலும்புகள் 4) இலக்கியங்கள்

05. இன்று வரை இலங்கையின் வரலாற்றை தொடர்ச்சியாக அறியும் ஒரே இலக்கிய மூலாதாரம்
    1) தீபவம்சம் 2) சூளவம்சம் 3) மகாவம்சம் 4) ராஜவலிய

06. பொலன்னறுவை கல்விகாரையை நிர்மாணித்தவராக கருதுவது
    1) 4ம் பராக்கிரமபாகு 2) 2ம் பராக்கிரமபாகு 3) 3ம் பராக்கிரமபாகு 4) 1ம் பராக்கிரமபாகு

07. "கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்ட நாடு
    1) இந்தியா 2) இலங்கை 3) சீனா 4) உரோம்

08. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்
    1) தாதுசேனன் 2) வசபன் 3) மகாசேனன் 4) 1ம் பராக்கிரமபாகு

09. மிருகங்களுக்கு முன்னர் தாவரங்கள் தோன்றிய யுகம் எது?
    1) பெலியொசொயிக் யுகம் 2) சிலூரியன் யுகம்
    3) பெரும்பனியுகம் 4) கேப்பிரியன் யுகம்

10. கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மூலாதாரம்

1) தீபவம்சம் 2) மகாவம்சம் 3) சூளவம்சம் 4) ராஜாவலிய

11. சாலிவாகன சகாப்தம் என்ற நாட்காட்டியுடன் தொடர்புடைய மதம்

1) இந்து 2) கிறிஸ்தவம் 3) இஸ்லாம் 4) பௌத்தம்

12. பூமி உருவாகிச் சிறிது காலத்திற்கு பின் தோன்றிய கண்ணுக்குத் தெரியாத உயிரினம் எது?

1) புரோகாயோட் பக்டீரியா 2) அல்பா 3) வைரஸ் 4) பங்கசு

13. மனிதனது நிலையை அடைந்த வானரம் எவ்வாறு அழைக்கப்பட்டது

1) நிகாரிகா 2) ஒஸ்ரலோபிதிகஸ் 3) லாவா 4) நெபியுலா

14. கி.மு 2.3 முதல் 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன்

1) ஹோமோ நியாண்டதால் 2) ஹோமோசேபியன்
3) ஹோமோ ஹெபிலஸ் 4) ஹோமோ இரக்ரஸ்

15. மனிதன் முதன்முதலில் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று எங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

1) இஸ்ரேல் 2) அரேபியா 3) உரோம் 4) பெரகல

16. மிருகங்களை வளர்த்து அவைகளிலிருந்து பால், முட்டை, இறைச்சி என்பனவற்றை பெற்ற காலம்

1) பழைய கற்காலம் 2) புதிய கற்காலம் 3) புராதன கற்காலம் 4) இடைக்கற்காலம்

17. முதன் முதலில் சீனாவில் ஆரம்பமான பயிர்ச்செய்கை எது?

1) நெல் 2) கோதுமை 3) சோளம் 4) குரக்கன்

18. சோளம் முதன் முதலில் பயிரிடப்பட்ட இடம் எது?

1) மத்தியதரைக்கடல 2) இந்தியா 3) மத்திய மெக்சிக்கோ 4) சீனா

19. மகாவம்சத்தை எழுதியவர்

1) மகாபராக்கிரமபாகு 2) தாதுசேனன் 3) வசபன் 4) மகாநாம தேரர்

20. தற்போது வாழும் மனித இனம்

1) ஹோமோ நியாண்டதால் 2) ஹோமோ இரக்ரஸ்
3) ஹோமோசேபியன் 4) ஹோமோஹெபிலஸ்

(20X2=40புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக?

01) A)

i) வரலாறு பாடத்தில் முதலாந்தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை ஒன்று தருக?

ii) இக்கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகு எது எவை?

iii) இக் கணிப்பீட்டினை செய்தமையால் நீர் பெற்ற நன்மைகள் 2 தருக?

(2+2+2=6 புள்ளிகள்)

B) தரப்பட்ட இலங்கைப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் இடங்களை அறிந்து அடைப்புக்குள் எழுதுக.

1) யாழ்ப்பாணம் (   )   4, காலி   (   )

2) கோகர்ண   (   )   5, மகாவலிகங்கை

3) கண்டி   (   )   6, அனுராதபுரம்   (   )

(6X1=6புள்ளிகள்)




Education கல்வி அධ්‍යාපන

02)

1) வரலாறு என்றால் என்ன?

2) வரலாற்றினைக் கற்பதற்குப் பயன்படுத்தப்படும் இரு மூலாதாரங்களின் வகைகளைக் குறிப்பிட்டு உதாரணம் தருக?

3) வரலாற்றினைக் கற்பதன் மூலம் பெறும் பயன்கள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

03)

1) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் மூலாதாரங்கள் 2 தருக?

2) வரலாற்றுக் காலத்தை அளவிட பயன்படுத்தப்படும் முறைகள் 4 தருக?

3) பின்வரும் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்வுகளை எழுதுக?

1) கி.மு. 544 ⟶ 2) கி.பி 274 :- 3) கி.பி 1948 :- 4) கி.பி 1 ⟶

(3X4=12புள்ளிகள்)

04)

1) மானிடப் பரிணாமம் என்றால் என்ன?

2) உலகில் வாழும் ஹோமோ சேப்பியன் மனிதனின் நான்கு இனப்பிரிவுகளும் எவை?

3) விவசாய யுகம் தோற்றம் பெற்றதன் மூலம் மனிதன் பெற்றுக்கொண்ட நன்மைகள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

05)

1) மனிதனின் கலாசார வளர்ச்சியின் 3 கட்டங்களைக் குறிப்பிடுக?

2) புதிய கற்காலத்தில் வாழும் மனிதர்கள் எதனை உணவாக உட்கொண்டனர்?

3) இடைக்கற்கால மனிதர்கள் வாழ்க்கை பழக்க வழக்க முறைகள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

06)

1) புதியகற்காலத்தில் பயிரிடப்பட்ட தானிய வகைகள் 3 எவை?

2) மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தமையால் அடைந்த நன்மைகள் 3 தருக?

3) A ⟶ நாம் வாழும் கோள் ⟹

B ⟶ மனிதன் முன்னேற்றம் அல்லது பரிணாமம் அடைந்த யுகம் ⟹

C ⟶ நெருப்பை முதன் முதலில் உபயேதகித்தவர் ⟹

D ⟶ பூமி தோன்றிய தூசிப்படலம் அழைக்கப்படும் பெயர் யாது ⟹

(3X4=12புள்ளிகள்)

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page